# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட் சகோதரிகள்**

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, விர்ஜின், வில்சன் மேரி, ஜோஸ்பிட்டா மேரி- திருச்சி, ஜெரின் மேரி, ஜோஸ்பின் மேரி, ஸ்டெல்லா ரோஸ் -திண்டுக்கல், அனன்சியா மேரி, டோம்னா மேரி, ஜார்லத் புஷ்பா, லூக்காஸ் மேரி, டோனெட்டல்லா அனஸ்த்தாசியாள், பிலோமினாள் - கும்பகோணம் மேரி மௌரிஸ், ஜீலி எலிசபெத் - தஞ்சாவூர், ரூபெல்லா மேரி, பிரேமா - திருநெல்வேலி, ஜான்சி மேரி - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, புஷ்பமேரி, சலேத்மேரி - திருப்பூர், ரூபி மேரி - கரூர், லோரா மேரி, ஜெசிந்தா ஆரோக்கிய மேரி, செபஸ்தி, எதெல்பெர்கா, ஆக்னஸ் ரோசாள், சகாயம், செராபின், ஜெயசேகரி, அருள் சீலி, வித்யா மேரி, ரஞ்சிதம்.

**பொதுநிலையினர்**

ரூபியா - மங்கலக்குன்று, பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா, சந்தனம், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; லீலாவதி, அமல செல்வி, இருதய விஜிலா, ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மிக்கேல்சாமி, புஷ்பக்கண்ணு - கோயம்பத்தூர். ரீனா அந்தோணிராஜ், இம்மாக்குலேட், வியாகுல மேரி, ஜெயராஜ் - சென்னை, சிப்ரியன், லீமா தெரஸ், மரிய பிரகாசம், கிளாரா லூர்து மேரி, ஞானசேகரன், கனிஷியஸ் விஷால், ஜெகரட்சகன் ஜோசப்.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. சகாயம் - கடலூர்
அருட்சகோதரி. ஜெரின் மேரி - திண்டுக்கல்
அருட்சகோதரி. ஜான்சி மேரி - மதுரை
திரு. பிரான்சிஸ் பேசில் - திருச்சி

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# உதவி செய்வோம்

## பதிப்பாசிரியர் பக்கம்


அ.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே, இன்றைய உலகில் எத்தனையோ மக்கள் யாராவது வந்து எங்களுக்கு உதவ மாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். பிறர் கஷ்டம் அறிந்து உதவுகின்ற உள்ளம் கொண்ட மனிதர்கள் நிச்சயம் மிகவும் உயர்ந்தவர்கள். கடவுள் படைத்த சிறந்த படைப்பான மனித இனத்திற்கு அவர் கொடுத்த சிறந்த பண்பு என்பது உதவி செய்தல். ஆபத்துக் காலத்தில் ஒருவர் செய்த உதவியை மட்டும் நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது என்பார்கள். ஒருவர் இந்த உலகில் பிறருக்கு உதவுகின்றவனாக இருக்க வேண்டுமென்றால் அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோர், பிறருக்கு உதவுவது அறம் என்று சொல்லி வளர்த்திருக்க வேண்டும்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன் வாழ்நாள் முழுவதும் பிறருக்கு நன்மை மட்டும்தான் செய்தார், தன்னால் எந்த அளவுக்கு பிறருக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு பிறருக்கு உதவி செய்தார். தன் தந்தை இந்த உலகில் அவருக்கு கொடுத்தப் பணியை சீக்கிரம் செய்ய வேண்டும் என்ற நெருக்கடியிலும் அவர், தன்னை யாரெல்லாம் உதவி என்று தேடி வந்தார்களோ அத்தனை பேருக்கும் முகம் கோணாமல், எரிச்சலடையாமல் பொறுமையாக உதவி செய்தார். காரணம் அவர் தாய் மரியாள் அவரை அவ்வாறு வளர்த்திருந்தார். வளர்த்தது மட்டுமில்லை அவரும் தன் வாழ்நாள் முழுவதும் பிறருக்கு உதவி செய்கின்றவராகதான் வாழ்ந்தார். அதானால்தான் நம் அன்னையை



## உள்ளே



| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | 05 |
| தூய மரியாவின் தூய்மைமிகு இதயம் | 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | 14 |
| மரியாவின் புகழ்ச்சிப் பாடல் | 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | 24 |
| மாதா மன்றாட்டு மாலை | 25 |
| பொதுநிலையினரின் பார்வையில் மரியா | 28 |
| எனக்கு ஓர் ஆசை அம்மா | 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | 32 |

சகாயமாதா என்று அழைக்கிறோம். ஜூன் மாதம் 27-ம் தேதி நாம் சகாய மாதா திருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். பொதுவாக மனிதர்கள் உதவுவார்கள், எப்போது என்றால் அவர்கள் நல்ல பொருளாதார நிலையில் இருக்கும்போது. ஆனால் நம் அன்னை அவ்வாறு கிடையாது. தான் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் தேடிச் சென்று உதவி செய்கின்றவராக அன்னை இருக்கிறாள். அதற்கு எத்தனையோ நிகழ்வுகள் உதாரணமாக இருக்கிறது.

தன் உறவினர் எலிசபெத் ஆறு மாத கருவினை தன்னுடைய வயிற்றில் சுமந்துக் கொண்டிருக்கிறார் என்ற செய்தியினை கபிரேயல் தூதர் மூலம் கேட்டதும் அவருக்கு உதவ வேண்டும் என்று முடிவு எடுக்கின்றார். எலிசபெத் வயது முதிர்ந்தவர் நிச்சயம் அவருக்கு உதவி செய்ய யாரும் இருந்திருக்க மாட்டார்கள் இது அன்னை மரியாளுக்கும் தெரியும். உதவ வேண்டும் என்று முடிவு செய்தவர் காலம் தாழ்த்தவில்லை, எடுத்த முடிவினை உடனடியாக செயல்படுத்துகின்றார். இவ்வாறு செல்லும்போது அன்னை மரியாள் ஒன்றும் திடகாத்திரமான உடல்நிலையைக் கொண்டிருக்கவில்லை. அவளும் தன்னுடைய வயிற்றில் கருவை சுமந்துக் கொண்டுதான் இருந்தாள். இருந்தும் எலிசபெத்துக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தோடு தன்னுடைய கஷ்டங்களைத் தாண்டி அன்னை மரியாள் உதவ செல்கின்றார். ஒரு சில மனிதர்கள் பிறருக்கு உதவி செய்யும்போது ஏதாவது சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தால் உடனே உதவி செய்வதை நிறுத்திக் கொள்வார்கள். ஆனால் நம் அன்னை அவ்வாறு கிடையாது. எத்தனை சவால்கள் வந்தாலும் தன்னுடைய உதவி செய்யும் குணத்தை மட்டும் மாற்றிக் கொண்டது கிடையாது. உறவினர் எலிசபெத்துக்கு உதவ வேண்டும், ஆனால் அவர் தங்கியிருப்பது நாசரேத்திலிருந்து வெகு தொலைவான யூதேய மலைப்பகுதி. அங்கு செல்வதற்கு ஒழுங்கான பாதைகள் இருக்கின்றதா என்றால் கிடையாது, அந்தப் பகுதிக்கு பாதுகாப்பாக பயணம் செல்ல முடியுமா என்றால் அதுவும் கிடையாது. இத்தனை சவால்கள் தன் கண்முன் இருந்தும் அன்னை மரியாள் பின்வாங்கவில்லை, அத்தனை சவால்களைக் கடந்து எலிசபெத்தின் வீட்டை அடைந்து அவருக்கு உதவ ஆரம்பிக்கின்றார்.

இன்னொரு நிகழ்வு கானாவூர் திருமணத்தில் அன்னை மரியாள் செய்த உதவி. திருமணத்திற்கு அன்னை மரியாள் தன் மகன் இயேசுவோடும் அவருடைய சீடர்களோடும் செல்கிறார். திருமண விருந்தில் திராட்சை இரசம் காலியாகிவிடுகிறது. என்ன செய்வது என்று தெரியாமல் திருமண வீட்டார் திகைத்திருக்கும்போது அவர்களின் நிலையை அறிந்த அன்னை எப்படியாவது இந்த திருமண வீட்டாருக்கு உதவ வேண்டும் என்று முடிவு செய்து, காலம் தாழ்த்தாமல் தன்னுடைய முடிவை செயல்படுத்துகின்றார். இதில் அவர் எதிர் கொண்ட சவால் தன் மகன் இயேசுவிடம் இருந்து வந்தது. திருமண விருந்தில் திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என்று இயேசுவிடம் சொன்னதும் அவரிடம் இருந்து நேர்மறையான பதில் வரவில்லை, அவர் சொன்னது அதற்கு நாம் என்ன செய்ய முடியும்? இருந்தும் அன்னையின் பரிந்துரையால் இயேசு அந்த திருமண வீட்டாருக்கு உதவி செய்கின்றார்.

**உதவிகள் பல செய்வோம்**
**உறவுகள் பல வளர்ப்போம்.**





முன்பாக எனக்கு ஒரு அழகிய மகனைக் கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**பிரின்சி – சோழிங்கநல்லூர்**

நான் எட்டு வருடங்களாக இந்த பங்கில்தான் இருக்கிறேன். திருமணம் முடிந்து இத்தனைக் காலமாக குழந்தை பாக்கியம் இல்லை. எனக்கு சில மருத்துவ பிரச்சனைகள் இருக்கிறது. அதனால் IVF சிகிச்சை மேற்கொண்டோம். அதை மூன்று முறை செய்தும் எந்த பலனும் இல்லை. எனக்கு இதில் உடன்பாடு இல்லை. கணவரின் சொல்லால் மட்டும் இதை செய்யலாம் என்று நான்காவது முறைக்கு முயற்சி செய்தோம். அப்போது மரியன்னையிடம் நீங்கள் எனக்கு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் அது உங்கள் பொறுப்பு என்று சொல்லிவிட்டு சென்றேன். அதேபோல் கருவுற்று இப்போது கடவுள் எனக்கு ஒரு அழகிய பெண் குழந்தை கொடுத்திருக்கிறார்கள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஜோஸ்பின் – சோழிங்கநல்லூர்**

எனக்கு கண்ணில் பிரச்சனை இருந்ததால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள். எனக்கு சர்க்கரை நோய் அதிகமாக இருந்ததால் அன்று பண்ணவில்லை, மருத்துவமனைக்கு வர சொன்னார்கள். சென்ற உடனே அறுவை சிகிச்சை ஆரம்பித்தனர் எந்தவொரு பிரச்சனையும் இல்லாமல் அறுவை சிகிச்சை முடிந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மேரி அந்தோணி – நெசப்பாக்கம்**

என்னுடைய கணவர் 2019-ம் ஆண்டு முதல் ஐரோப்பா நாட்டில் வேலை செய்கிறார், ஒன்றரை ஆண்டுக்கு பிறகு விசா புதுப்பிக்க வேண்டும் அப்போது கொடுக்கப்பட்ட இணைப்பில், பெயரில் ஏதோ மாற்றம் இருந்ததால் அது ரத்து செய்யப்பட்டது, கிட்டதட்ட ஐந்தரை வருடம் ஆகிறது. 2020-ம் ஆண்டு முயற்சிகள் எடுத்தோம், 2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மறுபடியும் விண்ணப்பித்தோம். இதற்காக 12 லட்சம் செலவு செய்தோம். இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் திருவிழா நடந்தபோது வந்து மரியன்னையிடம் எனக்கு கொடுங்க என்று கேட்கவில்லை ஆனால் ஒரு சாட்சியாக நிறுத்துங்க என்று சொன்னேன். உண்மையிலேயே இன்று ஒரு சாட்சியாக இருக்கிறேன். ஏப்ரல் 19-ம் தேதி என்னுடைய கணவருக்கு விசா அங்கீகரிக்கப்பட்டது. எனக்கு தெரிந்த ஒரு இஸ்லாமிய தம்பியின் 4 வயது குழந்தைக்கு நுரையீரல் கட்டி இருந்தது. மருத்துவமனையில் பரிசோதித்தபோது அது புற்றுநோய் கட்டி என்று உறுதியானது. மாதாவிடம் வந்து அழுது மன்றாடினோம். அறுவை சிகிச்சை செய்தார்கள். பின்னர் அந்தக் குழந்தைக்கு எந்தவொரு பிரச்சனையும் இல்லை. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. ஆன்டன் மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

மே மாதம் 4 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**மேரி டோம்னிக்**

எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். எனது இளைய மகன் ரிச்சார்ட் மற்றும் அவனது மனைவி மரியா இவர்களுக்கு திருமணமாகி எட்டு ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லை. நானும் என் வீட்டாரும் மரியன்னையிடம் தன் மகனிடம் பரிந்து பேசுமாறு வேண்டினோம். அதற்கு பலனாக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் தேதி ஒரு அழகிய குழந்தையைக் கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**அந்தோணி மேரி – வேளச்சேரி**

எனது பேத்திக்கு திருமணமாகி இரண்டு ஆண்டுகளாக குழந்தை இல்லை, இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் சனிக்கிழமை அன்று குழந்தை இயேசு ஆலயத்திற்கு வந்து கண்ணீர் சிந்தி மன்றாடினோம். இயேசு கிறிஸ்து ஒரு கருவை உருவாக செய்தார் இது ஐந்தாம் மாதம். அதே நேரம் அவளுக்கு வேலை இல்லாமல் இருந்து ஆண்டவரிடம் ஜெபித்து இப்போது வேலைக் கிடைத்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**வள்ளியூர்**

நான் சென்னைக்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றது. எனக்கு இங்கு எந்த கத்தோலிக்க ஆலயங்களும் தெரியாது. அப்போது என்னுடைய நண்பர் குழந்தை இயேசு ஆலயத்தை அறிமுகம் செய்தார். இங்கு வந்து நான்கு மாதங்களாக அழுது ஜெபித்தேன், நான் கருவுற்றேன். நாங்கள் காரில் பயணம் செய்தபோது எனக்கு பிரசவ வலிவந்து குழந்தை பிறந்தது. நான் மன்றாடியபடி ஈஸ்டர் பண்டிகைக்கு





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**விமர்சனத்தை வெற்றிக் கொண்ட அன்னை**

ஒரு தோட்டத்தில் பெரிய மாமரம் இருந்தது. அந்த மரத்தின் கிளைகள் முழுவதும் மாம்பழங்களால் நிறைந்து இருந்தது. மரத்தின் அடியில் நெடுநாள்களாய் ஒரு முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அந்த ஊரில் இருந்த சிறுவர்கள் மாமரத்தின் கனிகளை சுவைக்க ஆசைப்பட்டனர். ஆகவே பழங்களை பறிக்க கற்களை வீசினர். தவம் செய்துக் கொண்டிருந்த முனிவரின் மேல் ஒரு கல் விழுந்தது. கோபம் கொண்ட முனிவர் சிறுவர்களை திட்டினார், சபித்தார், சிறுவர்கள் மன்னிப்பு கேட்டனர். இனிமேல் இந்த தவறை செய்ய மாட்டோம் என்று உறுதியளித்தனர். ஆனாலும் முனிவர் அவர்களை விடாமல் தொடர்ந்து திட்டினார். உடனே ஒரு சிறுவன் ஐயா மரத்தின் மீது பல கற்களை வீசினோம், மரம் பழங்களை திருப்பி கொடுத்தது. உங்கள் மீது ஒரு கல்தான் விழுந்தது, நீங்கள் எங்களை சபிக்கிறீர்கள். உங்களை விடவும் மரம்தான் சிறந்தது என்றான். விமர்சனம் என்பது அனைவரும் எதிர்கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கிறது. இந்த டிஜிட்டல் உலகத்தில் அனைவரும் விமர்சிக்கப்படுகிறார்கள், அனைத்துச் செபங்களும் விமர்சிக்கப்படுகின்றன. அன்னை மரியாளும் விமர்சனங்களை எதிர்கொண்டிருப்பர். கனியுள்ள மரம்தான் கல்லடிபடும் என்பதுபோல மரியாளை நோக்கி பல விமர்சன கற்கள் வீசப்பட்டன. மரியாள் கருவுற்றபிறகு பல எதிர்ப்புக்கள் வந்தன. ஆகவேதான் மத்தேயு 1:20-ல் யோசேப்பே தாவீதின் மகனே, உன் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம் என்று இருப்பதைக் காண்கிறோம். யூத சமூகத்தின் எதிர்ப்புதான் யோசேப்பின் அச்சமாக இங்கு வெளிப்படுகிறது. கடவுளின் மீது கொண்ட திடமான நம்பிக்கை, எதிர்ப்புக்களையும், விமர்சனங்களையும் வெற்றிக் கொண்டு இறைமகனை பரிசாக இவ்வுலகிற்கு பெற்றுக் கொடுத்தார்.

நாம் பிறரை விமர்சிக்கும்போது மகிழ்ச்சியுறும் நாம் பிறர் நம்மை விமர்சிக்கும்போது வீழ்ந்து விடுகிறோம். விமர்சனம் என்பது எரிபொருளைப் போன்றது, அதை நம்மீது ஊற்றி எரித்து விடக்கூடாது, மாறாக நம்முடைய குறிக்கோளை சீர்படுத்தவும், வேகத்தை அதிகரிக்கவும் செய்யும் எரிபொருளாக பயன்படுத்த வேண்டும். விமர்சனத்தை தாங்கி கொண்டு இயேசுவை இவ்வுலகிற்கு பெற்றுக் கொடுத்த மரியாளைப்போல, எதிர்ப்புக்களை தாங்கிக்கொண்டு பல பரிமாணங்களை இவ்வுலகிற்கு பெற்றுக் கொடுப்பவர்களாக வாழ முயலுவோம்.

# தூய மரியாவின் தூய்மைமிகு இதயம்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

இயேசுவின் திரு இதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம் ஜூன் மாதம் என்பதை நாம் அறிவோம். அன்பின், கருணையின், இரக்கத்தின், மன்னிப்பின் ஊற்றாக இருக்கும் அந்த இதயத்திற்கு இம்மாதத்திலே பெருவிழா எடுத்து மகிழ்கின்றோம். மறுநாளே, தூய மரியாவின் தூய்மைமிகு இதயத்தையும் நினைவு கூர்கின்றோம். இந்த இரு இதயங்களும் நமக்கு சொல்லித்தரும் படிப்பினைகள் ஏராளம். இவற்றைக் கடைப்பிடித்தால ஒவ்வொரு மனித இதயமும் அன்பினாலும், தாழ்ச்சியினாலும் ஆட்கொள்ளப்படும். இவ்வுலகில் உண்மையான அமைதியும், மகிழ்வும் பிறக்கும். இறையன்பும், பிறரன்பும் ஊற்றெடுக்கும் இதயங்கள் நமது இல்லங்களிலும், சமுதாயத்திலும், ஏன் பரந்துபட்ட இவ்வுலகிலும் அதிகரிக்கும். மென்மையான உணர்வுகளால் நாம் நிரப்பப்படுவோம். இம்மாதம் முழுவதுமே இந்த இதயங்களைத் தியானிப்போம். இந்த இதயங்கள் நம்மிடம் என்ன பேச விரும்புகின்றார்கள் என்பதை உற்றுக் கேட்போம்.அன்பால் நம் இதயங்களை நிரப்ப இந்த இரு இதயங்களும் நம்மைக் கேட்கின்றன. அன்பை மட்டுமே உலகெங்கும் விதைத்து அதை உருமாற்றுவோம். அந்த உருமாற்றப் பணியில் நாமும் அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு அன்பாகவே உருமாறுவோம். இத்தகைய சிந்தனைகளைத் தாங்கியவர்களாய் இக்கட்டுரையில் நுழைவோம்.

**விழாவின் வரலாறு**

தூய மரியாவின் தூய்மைமிகு இதய விழாத் தோற்றத்தில் ஆவியாரின் செயல்பாடுகளைக் காணமுடிகிறது. திருத்தூதர்கள் காலத்திலேயே மரியாவின் மாசற்ற இதயத்தின் மீது பக்தி இருந்ததாகக் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து புனிதர்களும் இந்த இதயத்தைப் போற்றி வந்துள்ளனர். இப்பக்தியானது 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வளர்ச்சியுறத் தொடங்கியது. கிளேர் வாக்ஸ் பெர்னார்து, மச்சில்டா, ஜெர்த்ரூத், தாமஸ் பெக்கட், ஸ்வீடன் நாட்டு பிரிஜிட் ஆகியோர் மரியாவின் மாசற்ற இதயத்தைப் போற்றியும், அதன் பக்தியை வளர்த்தும் வந்தனர். புனித ஜான் யூட்ஸ் 1648 ஆம் ஆண்டு திருஅவையின் அனுமதியுடன் தலத் திருச்சபையில் இவ்விழா கொண்டாட முயற்சிகள் எடுத்தார். திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர், புனித கன்னி மரியாஅமல உற்பவியாகப் பிறந்தார் என்னும் நம்பிக்கை உண்மையை 1854 ஆம் ஆண்டு வெளியிட்டார். இதன் விளைவாக மரியாவின் மாசற்ற இதயத்தின் மீதுள்ள பக்தி பரவத் தொடங்கியது.

1916 ஆம் ஆண்டு பாத்திமாவில் அன்னை மரியா மூன்று குழந்தைகளுக்குத் தோன்றியபோது `இயேசுவே, எனது மாசற்ற இதயத்தின் பக்தி உலகெங்கும் பரவ விரும்புகிறார்" என்று மொழிந்தார். நமது அன்னை 1925, 1929 ஆகிய ஆண்டுகளில் வெளிப்படுத்திய காட்சிகளில் மாதத்தின் முதல் சனிக்கிழமையில் தனது மாசற்ற இதயம் போற்றப்பட, வணக்கம் செலுத்தப்படக் கேட்டுக் கொண்டார். புனித மேக்ஸ் மில்லியன் கோல்பே, மிக அதிகமாகவே மரியின் மாசற்ற இதயத்தைப் பற்றி எழுதியுள்ளார். `மாசற்றமாமரி! தூய ஆவியாரின் பத்தினி. விண்ணகத் தந்தையின் மகனையே





நான் எங்கெங்கு சென்றாலும்
எச்செயலைச் செய்தாலும்
நற்செயலே செய்வதற்கு
என்னோடு என்றென்றும்
நீ உடன் இருக்க
எனக்கு ஓர் ஆசை அம்மா!
இம்மண் உறைவோர் யாவருமே
விண்ணக அரசி உந்தன்
தாயன்பைக் கண்டுணர்ந்து
உம்மைப் போற்றியே புகழ்ந்திடவும் - நம்
சேய்களாக வாழ்ந்திடவும்
எனக்கு ஓர் ஆசை அம்மா!



# எனக்கு ஓர் ஆசை அம்மா!

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

அம்மா மரியே! அகிலத்தின் ஆதரவே!
அம்மா!......அம்மா! என
செல்லமாய் உனை அழைத்து
இதமான உன் மடியினிலே
மழலையாய் முகம் புதைத்து
இமைமூடி சுகம் காண
எனக்கு ஓர் ஆசை அம்மா!
துன்பம் எனைச் சூழும்போது
துவளாதே கண்மணியே
அம்மா நான் இருக்கின்றேன்
அரவணைத்துக் காத்திடுவேன்
எனக் கூறும்உன் மொழி கேட்க
எனக்கு ஓர் ஆசை அம்மா!
இறைமகனாம் உன் இயேசு மகன்
நடந்து சென்ற பாதையிலே
கால் பதித்து நடந்திடாமல்
தடம்புரண்டு நான் செல்கையிலே நீ
தாவியே என் கரம் பற்றிக் கூட்டிச்செல்ல
எனக்கு ஓர் ஆசை அம்மா!
வன்முறையும் தீவிர வாதங்களும்
வறுமையும் பல்பிணிகளும் இயற்கைச் சீற்றங்களும்
வையத்தை வாட்டும் நேரம் - உன்
முந்தானையால் எமை மூடிக்காக்க
அரவணைத்து ஆதரிக்க
எனக்கு ஓர் ஆசை அம்மா!





தனது மகனாகவும் கொண்டிருந்தார். என்னே, விவரிக்க முடியாத குடும்பம்! அந்த மாசற்ற மரியாவுக்கு நாம் உடைமையானவர்கள். இயேசுவும் மரியாவினுடைய உடைமையாகவே நம்மைப் பாவிக்கின்றார். மரியா, கடவுளையும், அவர் தம் மகனையும் அன்பு செய்வதில் நம்மை இணைத்துக் கொள்கிறார்". திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் 1944 ஆம் ஆண்டு இவ்விழா அகில உலகத் திருஅவையில் ஆகஸ்ட் மாதம் 22ஆம் நாள் சிறப்பிக்கப்படும் என அறிவித்தார். திருத்தந்தை 6 ஆம் பவுல் 1969 ஆம் ஆண்டு இயேசுவின் திரு இதயவிழாவிற்குஅடுத்தநாளில் இவ்விழாவினைக்கொண்டாட இறைமக்களுக்கு அறிக்கை விடுத்தார். இவ்வாறு இந்த விழா தற்போது நினைவு நாளாக சிறப்பிக்கப்பட்டாலும், அது உணர்த்தும் உண்மைகள் ஆழமானது, அர்த்தம் நிறைந்தது.

**அக வாழ்வின் ஆழம்**

மரியாவின் மாசற்ற இதயத்தில் அவரது அகவாழ்வின் ஆழத்தை அறிந்து கொள்ள முடிகிறது. இறைவனோடு மிக நெருக்கமாக இருந்தார். தன் மகனைத் தாய்க்குரிய பாசத்தோடு வளர்த்து உலகிற்குக் கையளித்தார். இதனால் இந்த மானிடத்தின் மீது அவர் கொண்டிருந்த அன்பு உறுதியாகிறது. நமது அன்னையின் தூய்மைமிகு இதயத்திற்கு விழா எடுப்பது என்பது, அவரது அகவாழ்விற்கு விழா எடுப்பதாகும். அந்த அகவாழ்வுதான் அனைத்துப் பொக்கிஷங்களின் உறைவிடமாக இருந்தது. அவரின் இன்ப துன்பங்கள், புண்ணியங்கள், நம்பிக்கையுடன் கூடிய பிரமாணிக்கம், இறைவிருப்பம் ஒன்றையே நிறைவேற்றக் கூடிய ஆர்வம், தாழ்ச்சியின் கொடுமுடியாகத் திகழ்ந்தது அனைத்தும் இந்த அகவாழ்விலிருந்து ஊற்றெடுத்தது. அவரின் தூய்மைமிகு இதயம் இந்த அகவாழ்வை இயக்கிக் கொண்டிருந்தது. இறை அருளால், இறை அன்பினால், மகனோடுதான் கொண்டிருந்த சீடத்துவத் தோழமையினால், அவர் ஒவ்வொரு நாளும் தனது அகவாழ்வின் ஆழத்திற்குச் சென்றார். தன் உள்ளத்தின் ஆழத்தில் உறையும் தூய ஆவியாரின் உள்ளொளியால் அவரது வாழ்வு இயக்கப்பட்டது. அவரது உள்ளம் மூவொரு இறைவனின் இல்லிடமானது. தூய ஆவியாரின் நிழல் எப்போதும் அவரைச் சூழ்ந்து இருந்தது.

புனித லூக்கா தனது நற்செய்தியில் இரு முறை 'மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்"என்று கூறுகிறார். இயேசுபிறந்த பின் ஏழை இடையர்கள், நடுஇரவில் வானதூதர் தமக்கு வழங்கிய மகிழ்வான செய்தியை மரியாவோடு பகிர்ந்தது மற்றொன்று காணாமற்போன இயேசுவை எருசலேம் ஆலயத்தில் சந்தித்தபோது தாய்க்கும் சேய்க்கும் நடந்த உரையாடல். முதல் அனுபவம் மிகவும் மகிழ்ச்சியானது. இரண்டாவது அனுபவம் பரிதவிப்பும் பாசமும் கலந்தது. நமது அன்னை மரியா, எந்தச் சூழலிலும் ஆரவாரம் செய்யவில்லை. தான் மெசியாவின் தாய் என்று பறைசாற்றவில்லை. கானாவூரில் புதிய இரசம் வழிந்தோடியதைக் கண்டு விளம்பரம் தேடவில்லை. தந்தை இறைவனோடு நீக்கமற ஒன்றிப்பு, மகனோடு இணைந்த மீட்பின் பயணம், மக்களின் தேவையில் குறிப்பறிந்து உதவி செய்தல் என்ற மனநிலை அவரது அகவாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

மரியாவின் இதயத்தின் ஆழ்ந்த இரகசியங்களை இன்னும் அலசிப் பார்ப்போம். புரியாத புதிருக்கு விடைகாணும் முதிர்ச்சி நிறைந்த கேள்விகள் பிறக்கும் ஒரு இதயம் அவருடையது. எனவேதான் 'இது எவ்வாறு நிகழும்" என்று வானதூதரிடம் வினவினார். தெளிவு கிடைத்ததும் இறைவனின் அசைவுகளுக்கு ஆம் என்று பணிந்தார். மெசியா மிக எளிமையான சூழலில் பிறந்து வளர்ச்சியடைவதைக் கண்டு மகிழ்ந்தார். திருச்சட்டங்களை நிறைவேற்றுவதில் உறுதியுடன் இருந்தார். இயேசுவைக் கோவிலில் அர்ப்பணித்தபோது சிமியோன் இறைவாக்கினர் மரியாவைப் பார்த்து, 'உமது உள்ளத்தையும் ஒருவாள் ஊடுருவிப் பாயும்" என்று கூறியபோது அமைந்த மனதுடன் அவ்வார்த்தைகளை உள்ளத்தில் உறைய வைத்தார். தனது

மகனின் வாழ்வில் அது நிறைவேறும் ஒவ்வொரு தருணத்திலும் `நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று உள்ளத்தில் உரக்கக் கூறினார்.

மரியாவின் தூய்மைமிகு இதயம் ஏழைகளின் தேவையை உய்த்துணரச் செய்தது. எனவேதான் கானாவூரில் இரசம் பற்றாக்குறை ஏற்பட்ட போது மரியா மகனிடம் விரைந்து சென்றார். திருமண வீட்டிற்கு நேரவிருந்த அவமானத்தைத் தடுத்து நிறுத்த இயேசுவிடம் பரிந்துரை செய்தார். அன்று மட்டுமல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் உலகில், திருஅவையில், சமுதாயத்தில், நமது இல்லங்களில் `திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது" என்று தொடர்ந்து தன் மகனிடம் மன்றாடுகின்றார். இன்றும் நன்மைகளையும், உதவிகளையும் இயேசுவிடமிருந்து பெற்றுத் தரும் அன்னையாக இருந்த போதிலும், அந்த இதயம் நமக்கு விடுத்துக் கொண்டேயிருக்கும் அன்பின் வேண்டுகோளை நாம் மறக்க முடியாது. அதுதான் `அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோ 2:5) என்பதாகும்.

அன்னையின் இதயம் எந்தத் துன்பத்தையும், வேதனையையும் தாங்கிக் கொள்ளும் இதயமாகத் திகழ்ந்தது. எதிர்க்கப்படும் அறிகுறியாக இறைமகன் இயேசு யூத சமுதாயத்தில் நடமாடும் போது அவரை நெருங்கிப் பின்தொடர்ந்தார். கல்வாரிப் பயணத்தில் துணிவுடன் சென்றார். தனது இதயம் ஆயிரம் வாட்களால் ஊடுருவப்பட்ட போதும், வீரமுடன் சிலுவையடியில் நின்று, தனது மகன் இயேசுவின் திரு இதயத்தோடு தனது மாசற்ற இதயத்தையும் இணைத்தார். திருஅவையின் தாயாகினார். தனது அன்பு மகன் விலாவானது ஈட்டியால் ஊடுருவப்பட்டு, அதிலிருந்து மீட்பின் அருட்சாதனங்களான இரத்தமும், தண்ணீரும் வழிந்தோடியதைத் தன் உள்ளத்தில் பருகினார். இயேசுவின் மீட்பினால் மானிடர் அனைவரும் ஈடேற்றம் அடைய விரும்புவதை அவரது காட்சிகளின் போது அவர் எடுத்தியம்புகிறார். மரியின் மாசற்ற இதயத்திற்குள் இத்தனை இரகசியம், இத்தனை ஆற்றல்கள். அந்த இதயத்திடமிருந்து ஆறுதலையும், ஆதரவையும், அரவணைப்பையும் பெற்று மகிழ்வோம். நமது இதயத்தையும் அவரது இதயமாக மாற்றுவோம்.

**மாசற்ற இதயம் தரும் செய்தி**

`தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்". இந்த இறைவார்த்தை மரியாவின் வாழ்வில் உண்மையானது. ஆமல உற்பவியாகவும், அருள் நிறைந்தவராகவும் இருந்ததால் மட்டுமல்ல, அவரது இதயம் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக இருந்தது. நாமும் இறைவார்த்தையின்படி நடப்பவர்களாக இருந்தால் அன்னையைப் போன்று இறைவனின் கண்களில் பேறுபெற்றவராவோம். பிறருக்குத் தீங்குவிளைவிக்காமல் நன்மை செய்வதே தூய உள்ளம் என்று திருத்தந்தை கூறுகிறார். இதைக் கடைப்பிடித்து நமது இதயத்தை தூய்மையானதாக்குவோம். முரியா அனைத்து நிகழ்வுகளையும் தன் உள்ளத்தில் பொதிந்து வைத்து, இதன் வழியாக இறைவன் என்ன கூறுகிறார் என்பதை அறிந்து அதற்குப் பதிலளிக்க, அப்பதிலுக்கு செயல்வடிவம் கொடுக்க முனைப்பாயிருந்தார். நமது வாழ்வில் நாம் சந்திக்கும் நிகழ்வுகள் வழியாக இறைவனின் உடன் இருப்பை, அவரது விருப்பத்தை உணர்வோம், நிறைவேற்றுவோம். காலத்தின் அறிகுறிகள் கடவுளின் கைவரிச் சட்டம் என்பதை எப்போதும் நினைவில் இருத்துவோம். `உம்மில் அன்றி எங்கள் இதயம் வேறு எதிலும் நிறைவடையாது" என்று புனித அகுஸ்தினார் கூறுகின்றார். மரியாவும் இதே மனநிலையில்தான் இருந்தார். இறைவனையும், அவரது சாயலில் படைக்கப்பட்டிருக்கும் மக்களை அன்பு செய்ய நமது இதயங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன என்ற எண்ணத்தை அடிக்கடி புதுப்பித்துக் கொள்வோம். அன்னை மரியாவின் இதயத்தைப் போன்று, நமது இதயங்களும் எல்லாச் சூழலிலும் சரிசமமானதாக, அனைவரையும் ஏற்று அரவணைப்பதாக, இருக்கட்டும். இவ்வாறு நன்மையே செய்து, மகிழ்ச்சியினால் அமைதிநிறை உலகைப் படைக்க நமது இதயங்கள் எப்போதும் தயாராக இருக்கட்டும்.





அன்னையின் வாழ்க்கை வரலாற்றை நாம் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக புதிய ஏற்பாட்டில் வெறும் 200 வாக்கியங்கள் மட்டுமே அன்னை மரியாளை பற்றி பேசுகின்றன. மரியா குறித்து நற்செய்தி நூல்களில் மிக மிகக் குறைவாகவே குறிப்பிடப்படுகின்றது. அவர் இயேசுவின் பொது வாழ்வில் அவருடைய சீடர்களை போன்று நெருக்கமாக உடன் இருக்கவில்லை. ஆனாலும் மரியாவின் சீடத்துவ வாழ்வு இயேசுவின் வாழ்வுக்கு மெருகூட்டும் ஒன்றாகவே பார்க்கப்பட்டது.

அற்பன உணர்வோடு இயேசு கிறிஸ்துவின் சீடராக அவர் வாழ்வதற்கு முன்னோடியாக அவரின் மூன்றாம் வயதில் அவர் ஆலயத்தில் பணி செய்வதற்காக விடப்படுகின்றார். தான் பருவம் அடையும் வரை கடவுளின் ஆலயத்திலேயே அவர் பணி செய்து வந்தார். மிகவும் தூய்மையானப் பெண்ணாகத் திகழ்ந்தார். விவிலிய குறிப்புகள் யோவான் 2: 1, மத்தேயு 12 :46-50 மற்றும் லுக்கா 8 : 19-21 படி மரியா பொதுவாழ்வில் ஒரு சில நேரங்களில் மட்டுமே ஏசுவோடு இருந்திருக்கின்றார். இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த அன்னையை மகிமைப்படுத்தும் விதமாக ஆண்டின் முதல் நாளில் மரியா இறைவனின் தாய் என்ற உண்மையை கொண்டாட திருச்சபை நம்மை அழைக்கிறது.

கடவுளின் தாய் என்பதால் மரியாவுக்கு மரியாதை என்பதை விட, கடவுளின் அன்பு மற்றும் மீட்பு ரகசியம் வெற்றியடைய அன்னை மரியா பெரிதும் ஒத்துழைக்கிறார் என்பதே உண்மை.

தம் மகனின் பேறு பலன்களை முன்னிட்டு அவர் சீரிய முறையில் மீட்கப்பெற்று நெருங்கி, பிரிக்க முடியாத முறையில் அவரோடு இணைக்கப்பட்டிருக்கிறார். இறைமகனின் தாய் என்ற இந்த உன்னத நிலையிலும் பெருமையாலும் அணிசெய்ய பெறுகிறார். மரியாவை உடன் மீட்பர் என்று திருச்சபை வரையறுத்து முன்மொழிந்திருக்கிறது. அன்னை மரியா இயேசுவுடன் இணைந்து இந்த உலகை மீட்கும் அவரது பணியில் தன்னையும் முழுமையாக அர்ப்பணித்திருக்கின்றார் இக்கருத்தை இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் பின்வருமாறு கூறுகிறது பாவத்தின் அடையாளமின்றி தன் முழு இதயத்தோடு கடவுளின் மீட்பு திருவுலத்தை ஏற்று தம் மகனுக்கும் அவரது உள்ளத்தில் தம்மையே ஆண்டவரின் அடிமையாக அவர் முற்றிலும் கையளித்தார் என்று.

இறுதியாக தனது வாழ்க்கை வரலாற்றில் நமக்கு உறுதியான ஆதாரமாக விவிலியத்தில் திருத்தூதர் பணிகள் 1: 14 - ல் மரியா திருத்தூதர்களோடு சேர்ந்து இயேசு கிறித்துவின் மறைவுக்கு பின்னரும் இறைவனின் மீட்பு திட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திகொண்டார் என்று நமக்கு தெரிய வருகிறது. நம் அன்னையின் சீடத்துவத்தை நாமும் மனதில் இறுத்தி இறைவனின் மீட்பு திட்டத்தில் நாமும் ஒரு அங்கத்தினராக பங்குபெற்று நல்லதொரு சிடர்களாக திருச்சபையின் வளர்ச்சிக்காக திருச்சபையை நல்ல முறையில் வழிநடத்திச் செல்வோம் என உறுதி ஏற்போம்



## பொதுநிலையினரின் பார்வையில் மரியா (15)

திரு. பரிசுத்தமணி சோழிங்கநல்லூர், சென்னை

### இயேசுவின் மனமார்ந்த சீடர் அன்னை மரியா

இறை இயேசுவில் அன்புக்குரிய சகோதர, சகோதரிகளே, சிறப்பான சீடர் என்பவர் யார் ? குருவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து அவரின் வார்த்தைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பவர்களே நல்ல சீடர்களாக திகழ்கிறார்கள். ஆனால் அன்னை மரியாள் அப்படியல்ல தான் கருவிலே சுமந்து ஈன்றெடுத்த தன் மகனின் எண்ணங்களை அப்படியே பிரதிபலித்ததால்தான் அவர் ஒரு சிறப்பு வாய்ந்த சீடராக, முதன்மையான சீடராக கருதப்படுகிறார். மரியா தன்னையே முழுமையாக ஆண்டவரின் ஊழியராக தன் மகனின் பணிக்காக தன்னை அற்பணித்தார். தன் மகனோடு அன்பில் ஒன்றிணைந்து அவரின் துன்பத்திலும், துயறினிலும், ஒன்றிணைந்தார். மரியா தமது சீடத்துவ வாழ்வில் நமக்கு அருகில் நின்று ஆறுதல் மட்டுமல்ல ஆன்மீக மகிழ்வையும் தருகின்றார். மரியா இயேசு கூறுவதை உற்று கவனித்து கேட்கின்றார். அவரில் நம்பிக்கை கொண்டு அவரின் படிப்பினைகளுக்கு கீழ்ப்படிந்து அதன்படி வாழ்கின்றார். முழுமையாக கிறிஸ்துவை பின்பற்றுதலில் நமக்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கின்றார். முன்னுக்குப் பின் முரணாக இல்லாமல் உண்மை உறுதியுடன் தன் இதயத்தில் கிறிஸ்துவின் மறை உண்மைகளை தியானிக்க நாம் மரியாவிடம் கற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மறை உண்மைகளை கொண்டாடி வாழ்ந்திட மரியா ஆன்மீக முன்மாதிரியாக இருக்கின்றார்.

அவர் இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீடராக இருந்ததால்தான் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல் ஜாதி, மதம், இனம் கடந்து மரியாயின் பக்தர்கள் அனைத்து பிரிவினர்களுக்கிடையேயும் காணப்படுகிறார்கள். ஏராளமான மக்களை கடவுளுடன் அழைத்து வரும் மறைபரப்பு பணியில் மரியா முதலிடம் பெறுகிறார். அதனால்தான் காணாவூர் திருமணத்தில் அவர் சொல்வது போல செய்யுங்கள் என்று இயேசுவிடம் கூட்டிச்செல்லும் வாய்க்காலாக மரியா திகழ்கின்றார். அப்படிப்பட்ட உன்னதமான சீடராகிய மரியாவின் வாழ்க்கை குறித்த முழுமையான வரலாற்று ஆவணங்களோ இயேசு கிறிஸ்துவுக்கு நற்செய்தியாய் இருப்பது போல அன்னையை குறித்த வாழ்க்கை தொகுப்பு தயார் நிலையில் நமக்கு கிடைக்கவில்லை. ஆங்காங்கே தேடி சேகரிக்கப்பட்ட தொகுப்புகளை கொண்டே





## அன்னையின் (6) திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### பொம்பேய் நகர் ஜெபமாலை அன்னை திருத்தலம், இத்தாலி-II

ஏறக்குறை 300 குடும்பத்தினர் தங்கள் சம்பளத்திலிருந்த மாதம் ஒரு பைசா வழங்குவதாக வாக்குறுதி அளித்தனர். இத்தகைய நன்கொடையாளர்களின் உதவியோடு புதிய ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் கி.பி. 1876ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் நாள் நாட்டப்பட்டது. புதிய ஆலயமானது கி.பி. 1883ல் கட்டி முடிக்கப்பட்டது. அவ்வமயம், பெர்தோலோ பின்வருமாறு கூறினார்: □அன்னையின் மகிமை விளங்க பல்வேறு புதுமைகள் நடக்கும் இவ்விடத்தில், நம் தலைமுறையினரும் எதிர்கால தலைமுறையினரும், வெற்றியின் அரசியாம் அன்னை மரியை போற்றும் வண்ணம், அன்னையின் மாபெரும் புகழுக்கு பெயர் சேர்க்கும் வண்ணம் இந்த ஆலயத்தை அர்ப்பணிப்போம்.□ கி.பி. 1883ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், வெற்றியின் அன்னைக்கு புகழ்மாலை என்கிற பக்தி முயற்சியானது பர்தோலோவினால் தொடங்கப்பட்டது. உலகம் முழுவதும் பரவிய இப்பக்தி முயற்சியானது ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 8ஆம் தேதியும், அக்டோபர் மாதம் முதல் ஞாயிற்று கிழமையும் அனுசரிக்கப்படுகிறது.

இந்த ஆலயமானது கி.பி. 1891 ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாள் திருத்தந்தை 13ஆம் லியோவின் பிரநிதியாக வந்த கர்தினால் ரபேயேலே மோனகோ லா வல்லேத்தா அவர்களால் அர்ச்சித்து புனிதப்படுத்தப்பட்டது.

கி.பி. 1894ஆம் ஆண்டு, பர்தோலோ மற்றும் அவரின் மனைவி சீமாட்டி ஃபர்னராரோ தெ புஸ்கோவும் ஆலயத்தை திருத்தந்தையிடம் ஒப்படைத்தனர். அன்றிலிருந்து இன்று வரை ஜெபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆலயமானது திருச்சபையின் கண்காணிப்பிலும், பராமரிப்பிலும் உள்ளது. இத்திருத்தலத்தை ஏற்று கொண்ட திருத்தந்தை அங்குள்ள அன்னையின் திருஉருவத்திற்கு மணிமுடிசூட்டி மகிமை படுத்தினார்.



ஜெபமாலை அன்னையின் பெருமையையும், புகழையும் உலகறிய பறைசாற்றிய பார்தோலோ லோங்கோ, கி.பி. 1926ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் நாள் இறைபதம் சேர்ந்தார். ஜெபமாலையை தன் உயிராக நேசித்த பர்தோலோ, ஜெபமாலை அன்னை மாதத்தில் விண்ணகம் சேர்ந்தது இறைவனின் அருட்கருணையாகும்.

கி.பி. 1965ல் இத்திருஉருவம் மூன்றாம் முறையாக புதுப்பிக்கப்பட்டபின், கொண்டாடப்பட்ட திருப்பலியில் திருத்தந்தை ஆறாம் பவுல் தன் மறைஉரையில், □அன்னையின் திருஉருவப்படம் புதுப்பிக்கப்பட்டு, சரிசெய்யப்பட்டது போல, எல்லா கிறிஸ்தவர்களின் உள்ளங்களும் புதுப்பிக்கப்படுவதாக! புத்துணர்ச்சி பெறுவதாக! எல்லா ஆசீராலும் வளம்பெறுவதாக!□ என்றார்.

திருயாத்திரைக்கான ஆலயம் கட்டப்பட்டு கொண்டிருக்கும் போதே, பர்தோலோவும், அவரது மனைவியும் பல்வேறு விதமான சமூக காரியங்களில் ஈடுபடத் தொடங்கினர். அவற்றில், முதலாவதாக ஆதரவற்ற சிறுமிகளுக்கான இல்லமாகும். முதல் இல்லத்தில் ஜெபமாலையின் 15 மறையுண்மைகளை குறிக்கும் வகையில் 15 சிறுமியர் சேர்க்கபட்டனர். அத்துடன் ஆதரவற்ற குறிப்பாக சிறையில் வாடுவோரின் பிள்ளைகளுக்கான ஒரு இல்லமும் ஆரம்பிக்கப்பட்டது. இங்ஙனம், சிறுவர், சிறுமியருக்கான இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த இல்லங்களை பராமரிக்கவும், அவர்களுக்கு கல்வி வழங்கவும், திருத்தலத்தைப் பராமரிக்கவும் பொம்பேய் ஜெபமாலை அன்னை பெண்கள் துறவற சபையையும் ஆரம்பித்தார். அத்துடன், இப்பணிகளில் உதவியாயிருக்க புனித தோமினிக்கின் மூன்றாம் சபையையும் உருவாக்கினார். இதில் ஆர்வமும், பக்தியும் கொண்ட இறைமக்கள் சேர்ந்து பணிபுரிந்தனர்.

□பொம்பேய் நகர் அன்னையிடம் தேசிய திருப்பயணம்□ கொண்டாடப்பட்டபோது, கி.பி. 1979ஆம் ஆண்டு அக்டோபர் 21ஆம் நாள் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் பொம்பேய் நகர் வந்து அன்னையிடம் செபித்தார். கி.பி. 1980 ஆம் ஆண்டு அக்டோபர் 26ஆம்





இருக்கலாம். விண்ணுலகக் குழந்தையைப் பெற்றதினால் இறுதிவரை அக்குழந்தையுடன் வாழ முடியாமல் ஏமாற்றத்துடனும் ஏளனத்துடனும் வாழ்ந்தார். இவ்வாறு இவ்வுலக தியாகங்கள் உலகப் பற்றின்மையின் வெளி அடையாளங்கள் மட்டுமில்லாது விண்ணகப் பேற்றின் அஸ்திவாரங்கள். மரியாவின் ஒழுக்க வாழ்வு மக்களுக்கான சிறந்த பாடமாகிறது.

**மரியாவின் செப வாழ்வு உலக பற்றுக்கு எதிரான ஓர் ஆயுதம்**

மரியாவின் வாழ்வு முழுவதுமே செப வாழ்வாக இருந்ததால் இறைவழியை விட்டு சிறிதும் பிறழாமல் நடக்க நேர்ந்தது. எங்கு இறைப்பற்று இருக்கிறதோ அங்கே உலகப் பற்றில்லை. இத்தகைய இறைப்பற்று மரியாவை எந்நேரமும் செபிக்கத் தூண்டுகிறது. எலிசபெத்தை சந்தித்த பின்னரும் மரியா இறைவனின் ஆற்றலையும் அதிசயத்தையும் வியந்து பாடி போற்றுகின்றார். (லூக் 1,46-55) இப்பாடல் முழுவதும் உலகப்பற்றினால் உருவாகும் கேடுகளையும் இறைப்பற்றினால் ஏற்படும் சிறப்புக்களையும் எடுத்துரைக்கிறது. குறிப்பாக அவரது செப வாழ்வு எவ்வாறு மேன்மையான நிலைக்கு அவரை உயர்த்தியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு இன்னும் அவரது இறைப்பற்று ஆழமாகிறது. எனவேதான் இவ்வுலக அரசுக்கு எதிராக இறையரசைக் கட்டும் பணியில் தீவிரமாகிறார். ஓடி ஒளிந்த சீடர்களை ஒன்றுதிரட்டிச் செபிக்கிறார்.(திப 1,13-14) தூய ஆவியின் துணையோடு திருச்சபையின் வளர்ச்சிக்கு உரமளிக்கின்றார். இவ்வாறு உலகப் பற்றை உதறித்தள்ளி இறைப்பற்றில் வேரூன்றிய மரியா உலகிற்கே தாயாகும் பெரும்பேற்றைப் பெற்றார்.

இன்றைய நாளில் உலகப் பற்றைத் தூக்கி எறிந்துவிட்டு இறை அழைப்பை ஏற்று வாழும் இறையடியார்களின் வழிகாட்டியாக மரியா திகழ்கின்றார். பல புனிதர்களுக்கும், மறைசாட்சிகளுக்கும் இவர் ஒரு முன்மாதிரியாக விளங்கியதால்தான் அவர்களால் தங்கள் அழைப்பில் உறுதியாக நிற்க முடிந்தது. கற்பின் கலங்கரை விளக்கமாய் மரியா திகழும்போது கரை காணாமல் கப்பல்களாய் நாமும் சிறக்கலாம் என்பதில் எவ்வித ஐயமில்லை.

அவர் பிறந்த இடம்கூட யாரும் அறிந்திடாத நாசரேத் ஏழ்மையின் சின்னமாக மரியா வெளிப்படுகின்றார். இத்தகைய தாழ்நிலையின் கோலமான மரியாவைத்தான் தனது மகன் தங்க இருக்கும் தங்க சுரங்கமாக இறைவன் பார்க்கின்றார். ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே என்னும் இயேசுவின் சமவெளிப்பொழிவு இவ்வாறு நிறைவேறுகிறது.

யூத சமயத்தில், ஒரு பெண்ணின் கன்னித்தன்மையானது கடவுளின் சாபமாகப் பார்க்கப்பட்டது. இதுவும் அப்பெண்ணைத் தாழ்நிலையின் பிம்பமாக எடுத்துக் காட்டியது. பழைய ஏற்பாட்டில், இப்தாவின் புதல்வி தனது கன்னிமை குறித்து மிகவும் வெட்கப்படுகிறாள், வேதனைப்படுகிறாள்(நீதி 11,37) எரேமியாவும் தனது கன்னித் தன்மையைக் காத்துக் கொள்ளும்படி இறைவன் அவருக்கு கட்டளையிடுகின்றார்.(எரே 16,1-6) ஆனால் எவரொருவர் தனது கன்னித் தன்மையோடு காலத்தை கழிக்கின்றாரோ அவர் இஸ்ரயேல் குலத்தோரில் மிகவும் தாழ்ந்தவராவர். இவ்வாறு கன்னிமையோடு ஒருவர் வாழ்வதென்பது உலகப் பற்றுக்கு எதிரானது. ஆனால் இறைப்பற்றுக்கு சார்பானது. இத்தகைய கன்னிமையோடு வாழ்ந்த மரியா உலகப்பற்றை உதறித் தள்ளிவிட்டு இறைப்பற்றை உடமையாக்கிய உன்னத பிறவி.

**இறைவனுக்கு சமர்ப்பணமான மரியின் கற்பு**

எவரும் இரு தலைவர்களுக்கு பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்துகொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது.(மத் 6,24) மரியா தனது கற்பைக் கடவுளுக்கு காணிக்கையாக்குகிறார். கட்டிய கணவனுக்கே மனைவியின் கற்பு அர்ப்பணிக்கப்பட வேண்டும் என்பது மனித இயல்பு ஆனால் மரியின் வாழ்வில் இரு ஊழியர்களுக்குப் பணிவிடை புரியாமல் இறைவனுக்கு மட்டுமே பணிவிடை புரிந்திட இறைத்திட்டம் நிறைவேறிடத் துணைபுரிகிறார். உலகப் பற்றை உதறித்தள்ளிய மரியா இறைவனில் ஐக்கியமாகிறார் இறை உறவில் ஐக்கியமாகிய அவர் நிறை வாழ்வில் சங்கமிக்கிறார்.

உலக வாழ்வே உயர்ந்த வாழ்வென மரியா நினைத்துக் கடவுளின் அழைப்பினை புறக்கணித்திருந்தால் கடவுளின் தாயாகியிருக்க முடியாது. அதே வேளையில் உலகத்தின் பார்வையில் மிகச் சிறந்தவளாகியிருப்பார். உலக வாழ்வை புறக்கணித்து இறைமகனுக்கு வாழ்வளித்ததால் இறைவனின் பார்வையில் மிகச் சிறந்தவராகியிருக்கிறார். இவ்வுலக குழந்தைகளை பெற்றிருந்தால் இறுதிகாலம் வரை அவர்களுடன் மகிழ்ந்து







நாள், பர்தோலோ அவர்கள் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள் முத்திபேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார். அந்நிகழ்வின் போது திருத்தந்தை அவர்கள் பர்தோலோவை 'அன்னையின் மைந்தன்', எனவும், 'ஜெபமாலையின் அப்போஸ்தலர்' எனவும் அழைத்து பெருமைப்படுத்தினார்.

கி.பி. 2008ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் நாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், அன்னைக்கு ஆறாவது ரோஜா மலரை அணிவித்து மகிமைப்படுத்தினார்.

**ஆலய வடிவமைப்பு**

இந்த ஆலயமானது முதலில், அதாவது கி.பி. 1891ல் அர்ச்சிக்கப்பட்ட போது, அந்தோணியோ குவா என்பவரால், இலத்தீன் சிலுவை வடிவில் வடிவமைக்கப்பட்டு, 420 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டது. ஆலயத்தின் முகப்பானது ஜியோவானி ரிஸ்போலி என்பவரால் கி.பி. 1893ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் நாள் தொடங்கப்பட்டது. ஆலயத்தின் முகப்பின் உச்சியானது ஜெபமாலை அன்னையின் திருஉருவத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இத்திருஉருவம் கர்ராரா பளிங்கியின் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. அதன் எடை 18,000 கிலோ கிராம் ஆகும். இந்த அற்புதமான கலைப் படைப்பை



செய்து அன்னையின் ஆசீரை நிறைவாகப் பெற்று கொண்டவர் கயதானோ கியாரோமொன்தே என்பவராவார். இத்திருவுருத்தின் கீழ் □அமைதி□ என்ற சொல் “PAX” எனவும் முடிக்கப்பட்ட ஆண்டு, □1901”, உரோமை எண்களால் “MCMI” என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்த திருப்பயணிகளின் எண்ணிக்கை கருத்தில் கொண்டு, ஆலயமானது, இலத்தீன் சிலுவை அமைப்பு மாறாமல் கி.பி. 1934 - 1939 ஆம் ஆண்டுகளில் விரிவுபடுத்தப்பட்டது. இப்பணியானது, ஆயர் அந்தோணியோ அனஜ்தாஸியோ ரோஸ்ஸி அவர்களால் தொடங்கப்பட்டது. இப்பணியின் கட்டிட அமைப்புகளை, கட்டிட கலையில் சிறந்து விளங்கிய மோன்சிங்கோர் ஸ்பிரித்தோ மரிய







# மாதா மன்றாட்டு மாலை

8



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## அத்தியந்த விரக்தியாருக்கிற மாதாவே மாசற்ற கன்னி மாதாவே!

எந்த ஒரு புது முயற்சியும் பல படிநிலைகளைக் கொண்டதாகவும் எதிர்பாராத எதிர் விளைவுகளைத் தரக்கூடியதாகவும் அமையும். பலரது வாழ்வுகள் உலகிற்கும் பல பல பாடங்களைக் கற்று கொடுத்திருப்பதாக வரலாறு படம் பிடித்துக் காட்டுகிறது. நாடுகளைக் கண்டுபிடிக்கப் புறப்பட்ட பல மாலுமிகள் இயற்கை சீற்றத்தால் நாசமாகிப் போன உண்மையையும், புதிய கருவிகள் மற்றும் பொருட்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கிய விஞ்ஞானிகள் விதியின் வலையில் சிக்கிய கதையும் புதிய முயற்சிகள் சவால்கள் நிறைந்தது என்பதை எண்பிக்கின்றன. மரியின் வாழ்வும் ஒரு புதிய முயற்சியே அம்முயற்சியானது மரியா பல தியாகங்கள் புரிய வேண்டுமென்ற கட்டுப்பாட்டை விதித்தது. அதாவது, உலக வாழ்வைத் துறக்க வேண்டும். உலக பற்றை விலக்க வேண்டும். அதற்காக மரியாவிற்கு கிடைத்த பரிசுதான் இறைவனின் தாய் எனும் உயரிய நிலை. தனது உடலைப் பாதுகாத்துப் பரிசுத்தமாய் வைத்ததின் விளைவாக மரியா உலக வாழ்வுக்கு எதிரியானார்.

## ஆணுறவு இல்லாமல் கருத்தரிப்பு

இன்றைய திரைப்படங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், பத்திரிக்கைகள் மற்றும் செய்திதாள்கள் பாலியலை மையப்படுத்தியே பணம் சம்பாதிக்கின்றன. பெருமளவில் ஏற்படுகின்ற வன்முறைகள், கொலைகள், கற்பழிப்புகள், குடும்பப் பிரச்சனைகளின் எதிரொலிகளே. கணவன் மனைவிக்கிடையே உள்ள பேரன்பின் வெளிப்பாடுதான் உடலுறவு. ஆனால் இறைவனின் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தனது ஆசையை தாரை வார்க்கின்றார் மரியா. தனது கன்னித் தன்மைக்குக் களங்கம் ஏற்படுத்தாமல் அதனை கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றார்.(லூக் 1,34-35)

## தாழ்நிலையிலும் மரியா ஒரு தங்கச் சுரங்கம்

ஏனெனில் அவர்தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார்.(லூக் 1,48) மரியாவின் தாழ்ந்த நிலை என்பது அவரது உலகப் பற்றில்லாத வாழ்வு முறையைக் காட்டுகிறது.



# புனித ஜூலியானா O S M



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

புனித ஜூலியானா பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஃபுளோரன்ஸ் நகரில் பிறந்தார். இதனால், நமது சபையை தொடங்கிய ஏழு புனித தந்தையர்களை அறிந்து தெரிந்து கொள்ள வாய்ப்பை பெற்றார். அதிலும் சிறப்பாக, எழுவரில் ஒருவரான, புனித அலெக்சிஸ் புனித ஜூலியானாவின் உறவினர். இவர், ஃபுளோரன்ஸ் நகரின் முக்கியமான உயர்வகை குடும்பத்தை சார்ந்தவர். தன்னுடைய பதினைந்தாம் வயதில் புனித ஜூலியானா, தனது உறவினரான புனித அலெக்சிஸ் அவர்களின் மறையுரையை கேட்டு, இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டதை உணர்ந்தார். எனவே, அவர் கடவுளைப் பற்றி சிந்தித்து தவம் செய்வதற்கும், கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க முடிவு செய்தார். இதனால், நமது மரியின் ஊழியர் ஆலயத்திற்கு வந்து அனைத்து திருவழிபாடுகளிலும் பங்கேற்று திருவிவிலிய அறிவை வளர்த்துக் கொண்டார். நமது புனிதர்களைப் போல் வாழ ஆசைப்பட்டதால், கருப்புநிற மேலாடையை துறவறத்தின் அடையாளமாக அணிந்து கொண்டார். புனித பிலிப் பெனிசி இவருக்கு ஆன்மிக குருவாக இருந்து இவரின் ஆன்மிகத்தை இன்னும் ஆழப்படுத்தினார். இவரின் இந்த எடுத்துக்காட்டான வாழ்வை கண்டு பல இளம்பெண்களும் இவரை பின்தொடர்ந்தனர். இவர்கள் அனைவரும், ஏழைகளுக்கு உதவுவதிலும், திருவழிபாட்டில் உதவுவதிலும் கருத்தாய் இருந்தார்கள். இவ்வாறு சென்று கொண்டிருந்தபோது, புனித ஜூலியானா கொடிய நோயினால் தாக்கப்பட்டார். இதன் விளைவாக, அவரால் இனி எந்த உணவையும் உட்கொள்ள முடியாத சூழல் உருவாக்கியது. ஆனால், புனித ஜூலியானா செபம், தவம் செய்வதை நிறுத்தவில்லை. ஆனால், அவருக்கு இறைவனின் உடலைப் பெற விருப்பம் கொண்டார். அவ்வாறு பெற்றுக் கொண்டால், அவரால் நற்கருணையை விழுங்க முடியாது என்றும், அதை வாந்தி எடுத்துவிடுவார் என்றும் அனைவருக்கும் தெரியும். அதனால், அவருக்கு நற்கருணை வழங்கப்படாமல் இருந்தது. அவர் வலியுறுத்தியதால், அவருக்கு நற்கருணை எடுத்துச் சென்றார்கள். அதை அவர் தனது மார்பில் வைக்க சொல்லி கேட்டுக் கொண்டார். அவ்வாறு அவர்கள் வைத்த பின் குருவானவர், நோயில் பூசுதலுக்கான செபத்தை சொல்லிக் கொண்டிருக்கும் போதே, மிகுந்த மகிழ்ச்சியுடன் அவள் முகம் பொலிவானதை, அவரோடு இருந்தவர்கள் கண்டனர். அந்த மனநிறைவோடு அவர் இறைவனடி சேர்ந்தார். அவரின் மார்பில் வைத்த நற்கருணையும் காணாமல் போய்விட்டது. அவரது மார்பின் வழியாக நற்கருணை இதயத்திற்குள் சென்றுவிட்டது என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள். இந்த அற்புதத்தை கண்டு அனைவரும் வியந்தார்கள். இவரின் புனிதத்துவதை அறிந்ததால், வத்திக்கான் ஆலயத்தில், திருத்தந்தை திருப்பலி கொண்டாடும் பலிபீடத்தின் இடதுபுறத்தில் புனித ஜூலியானாவின் ஒரு மிகப் பெரிய சுரூபம் வைக்கப்பட்டுள்ளது.

புனித ஜூலியானா, திருத்தந்தை பன்னிரெண்டாம் க்ளெமென்ட் அவர்களால் 1737 இல் புனிதராக அறிவிக்கப்பட்டார். இன்றும் அனைத்து மரியின் ஊழியர் பெண் துறவிகளுக்கும் பாதுகாவலியாகவும், எடுத்துக்கட்டாகவும் இருக்கிறார்.







கியப்பெத்தா அவர்களே நேரடியாக செய்து முடித்தார். புதுப்பிக்கப்பட்ட ஆலயமானது 2000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டதாகவும், 6000 பேர் அமர்ந்து திருப்பலியில் பங்கேற்க கூடியதாகவும் அமைந்திருக்கிறது.

கி.பி. 1921-1925 ஆம் ஆண்டுகளில் 80மீட்டர் உயரமுள்ள ஒரு ஆலய மணிக்கோபுரம் கட்டப்பட்டது. இப்பணியானது, அரிஸ்திதே லியோனி மற்றும் அவரது சகோதரர் பியோ லியோனி அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

சாத்தானின் குருவாக இருந்த ஒருவர், அன்னையால் ஈர்க்கப்பட்டார். தீமைகளை வெல்லும் ஆயுதமான ஜெபமாலையை வெட்கப்படாமல் கையில் எடுத்தார். உலகையே வெற்றி காணும் அமைதியின் ஆயுதமாக மாற்றினார். இறைவனின் இரக்கம் ஆலயத்திலும், வழிபாடுகளிலும் உணரப்படுவது போல, ஏழை, எளியோர், மற்றும் குழந்தைகளின் துயர்துடைப்பதிலும் மிளிர்கிறது என்று தன் வாழ்வால் வாழந்து காட்டிய வணக்கத்துக்குரிய பர்தோலோ லோங்கோ நம்மை அன்னையின் வழியில் வழிநடத்துகிறார். ஜெபமாலை செபிப்போம், அன்னையின் வழியில் ஆண்டவரை அடைவோம்.

இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ள, முத்திபேறுபெற்ற பர்தோலோவின் முத்திபேறு பட்டம் வத்திக்கானில் வழங்கும் திருநிகழ்வின் புகைப்படங்களை, உரோமையில் விவிலியத்தில் மேற்படிப்பு படிக்கும் அருட்பணி. செல்வகுமார் மஊச அவர்கள், வத்திக்கான் புகைப்பட பிரிவிலிருந்து வாங்கி நமக்கு தந்துள்ளார். அருட்பணியாளரின் பணியும், படிப்பும் சிறக்க நம் வாழ்த்துக்களும், செபங்களும்.

திருப்பயணம் தொடரும்...........

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## யோசுவா



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | | 4 |
| | 6 | | | | | | | 7 | |
| | | 10 | | | | | 11 | | |
| | | | | | | 13 | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | 12 | | | | | | |
| | | 9 | | | | | | | |
| | 5 | | | | | | | 8 | |
| 1 | | | | | | | | | 3 |

**வலமிருந்து இடம்**

3) ஏறக்குறைய நாற்பதாயிரம் பேர் போருக்குத் தயாராக ......... முன்னால் எரிகோ சமவெளிக்குச் சென்றனர்.

4) அவர்கள் திரும்பி வந்து யோசுவாவிடம், மக்கள............. அனுப்பவேண்டாம். இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் பேர் சென்று ஆயி நகரைத் தாக்கட்டும். மக்கள் எல்லாரும் அங்குச் சென்று களைப்படைய வேண்டாம். ஏனெனில் அங்குள்ளவர்கள் சிலரே என்றனர்

7) யோசுவா அவர்களிடம், நீங்கள் திரளான மக்களாக இருப்பதால் பெரிசியர், இரபாயிம் ஆகியோரின் காட்டு நிலத்திற்குப் போய் அதைத் திருத்திக் கொள்ளுங்கள். எப்ராயிம் மலைப்பகுதியோ உங்களுக்கு மிகவும் குறுகலானது ............

11) அறியாமல் தவறுதலாக ஒருவரைக் கொன்றவர் இரத்தப்பழி வாங்குபவரிடமிருந்து தப்பி ஓடித் தஞ்சம்புக இந்நகர்கள் உங்களுக்கு அடைக்கலமாக ...........

13) அவர்களிடம் அவர், இந்நாட்டை ஆண்டவர் உங்களுக்கு அளிப்பார் என்று நான்........... ஏனெனில் உங்களைப் பற்றிய அச்சம் எங்களிடையே எழுந்துள்ளது. உலகில் வாழ்வோர் அனைவரும் உங்கள்முன் நடுங்குகின்றனர்.

**இடமிருந்து வலம்**

1) உன் வாழ்நாள் முழுவதும் எந்த மனிதனும் உன்னை எதிர்த்து நிற்கமாட்டான். மோசேயுடன் நான் இருந்ததுபோல் உன்னோடும் ............

2) ஆயியின் மன்னன் இதைக் கண்டதும், அந்நகர மக்கள் காலையில் விரைந்து எழுந்து இஸ்ரயேலுடன் போரிட வெளியே வந்தனர். அவனும் மக்கள்........... ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு, அராபாவுக்குமுன் வந்தனர்.

5) யோசுவா கிபயோன் மக்களை நல்லிணக்கத்தோடு ஏற்று, .......... உடன்படிக்கை செய்து கொண்டு அவர்களை வாழவிட்டார்.

6) ஆண்டவரின் ஊழியரான மோசேயும் இஸ்ரயேலரும் அவர்களைத் தோற்கடித்தனர். ஆண்டவரின் ஊழியரான மோசே அதை ரூபனுக்கும் காத்துக்கும் மனாசேயின் பாதிக் குலத்திற்கும் உரிமையாகக் ...............





பலம் அவனை நிரப்ப ஆரம்பிக்கிறது. எனவே துன்பங்களை எதிர்மறையாகப் பார்க்காமல், நேர்மறையாக அதாவது இறைப் பிரசன்னத்தைப் பெற்றுத் தரும் வாய்க்கால்களாக அணுகுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய வாசகத்தில் இறைவாக்கினர் எசேக்கியல் இறைவனின் வார்த்தையைக் கேட்டு அதன்படி வாழ மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார். ஆனால் மக்கள் அவரது குரலுக்குச் செவிசாய்க்கவில்லை, அவருடைய போதனையை எதிர்த்தனர், ஆனால் மனம் தளராது தொடர்ந்து இறைத்திட்டத்தை பறைசாற்றினார். எதிர்ப்பின் மத்தியிலும் இறைவாக்குரைப்பது இறைவாக்கினரின் கடமை என்று எண்ணி வாழ்ந்தார். நாமும் நமது துன்பங்கள் மத்தியிலும் இறைவனுக்கு சாட்சிகளாக வாழ முயல்வோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

இன்றைய இரண்டாம் வாசகத்தில் புனித பவுலடியார் பெருங்குறை ஒன்று உடலில் தைத்த முள் போல் தன்னை வருத்திக் கொண்டு இருப்பதாக எழுதுகிறார். முள் என்பது பவுலடியாரை அடிக்கடி துன்புறுத்திய உடல் நோயையோ அல்லது உடல் நலக்குறையையோ சுட்டிக்காட்டுகின்றது. நற்செய்தி பணியில் இன்னும் அதிகமாக ஈடுபட முடியாத அளவுக்கு உடல் நோய் அவரை தடுக்கலாம். அவர் தொடர்ந்து இறைபணியை துணிவோடு செய்தார். அவரை போல நாமும் எல்லா சூழ்நிலைகளிலும் இறைவனுக்கு சாட்சிகளாக வாழ முயல்வோம்.

**மன்றாட்டுக்கள்:**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் எல்லா சூழ்நிலையிலும் இறைவார்த்தைய தியானித்து அவ்வார்த்தையை சொல்லாலும் செயலாலும் பிறருக்கு அறிவித்திட தேவையான மனதிடத்தையும் மனவலிமையும் அளித்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, நற்செய்தி அறிவிப்பு பணியின் நிமித்தமாக பல்வேறு சவால்களையும், துன்பங்களையும் சந்திக்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கு உமது பிரசன்னம் ஆறுதலின் பிரசன்னமாக வல்லமையின் பிரசன்னமாக அமைய அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, உடல் உள்ள நோய்களாலும் கடன் மற்றும் குடும்ப பிரச்சனைகளாலும் நம்பிக்கை. மகிழ்ச்சி, சமாதானம் இழந்து இருக்கின்ற உம்மக்களுக்கு உமது வார்த்தை சுகமும், ஆறுதலும், விடுதலையும் தருகின்ற பிரசன்னமாக அமைய அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்களிடையே இருக்கின்ற அவநம்பிக்கையை மாற்றி கடவுள் நம்மோடு என்றும் பயணம் செய்கிறார் என்ற உறுதியான நம்பிக்கை கொள்ள அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

கையளித்தார். அனைவரும் அன்பில், பகிர்வில், ஒற்றுமையில் வளர வேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகின்றார். இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் மன்னாவை பகிர்ந்து உண்ட நிகழ்ச்சியில் இருந்து தூய பவுல் இவ்வாசகத்தை எடுக்கிறார்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியால் வழிநடத்தப்பட்டு உயிர்ப்பின் மக்களாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் பாவத்திலிருந்தும் தேவையற்ற பயத்திலிருந்தும் முழுமையாக விடுதலை பெற்று மகிழ்ச்சியோடும், சமாதானத்தோடும், நம்பிக்கையோடும் வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, குடும்பங்களிலும், சமூகத்திலும் வரும் சவால்களை கண்டு மனம் சோர்வடையாமல் அவற்றை கனிவோடு எதிர்கொள்ள கூடிய ஆற்றலையும், வலிமையையும் எங்களுக்கு அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, எங்கள் வீடுகளிலும், மருத்துவ மனைகளிலும் இருக்கின்ற நோயாளர்கள்மீது இரக்கம் கொண்டு அவர்கள் நற்சுகம் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, எங்கள் அனுதின வாழ்வில் நீர் எங்களுக்கு கொடுத்துள்ள அருள் கொடைகளை பிறரோடு பகிர்ந்து கொண்டு ஒற்றுமையோடும், சமாதானத்தோடும், சகோதரத்துவத்தோடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 14-ம் ஞாயிறு (07.07.2024)

**எசே 2:2-5 2கொரி 12:7-10 மாற் 6:1-6**

**முன்னுரை**

என்னுடைய சுமைகளைப் பகிர்ந்து கொள்ள ஒருவனைத் தேடினேன். கண்டு கொண்டேன். இப்போது அவனையும் சேர்த்துச் சுமக்கிறேன். இது ஒரு புதுக் கவிதை. இதுதான் இன்றைய மனித வாழ்வு. நமது வாழ்வின் சுமைகளைப் பகிர்ந்து கொள்ள உதவி கேட்கும் போது, மேலும் மேலும் துன்பங்களையும் துயரங்களையும் சுமைகளாக நம்மீது சுமத்தி நம்மைத் திக்கு முக்காட வைக்கும் மனிதர்கள் பலர், இன்றைய மனிதன் எண்ணற்ற துன்பங்களையும் பிரச்சனைகளையும் சுமைகளாக சுமந்து கொண்டு வாழ்வுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறான். திசை தெரியாத மரக்கலமாய் திக்கு முக்காடிக் கொண்டு இருக்கிறான்.

இன்றைய வாசகங்கள் மனித வாழ்வில் நாம் சந்திக்கும் துன்பங்களைப் பற்றி பேசுவதோடு அவற்றை சந்திப்பதற்கான புதிய கண்ணோட்டத்தை நமக்குத் தருகின்றன. நமது அனுதின துன்பங்களில்தான் இறைபிரசன்னம் அதிகமாக வெளிப்படுவதைச் சுட்டிக் காண்பிக்கிறார் புனித பவுல் அடியார். மனிதனின் குறையிலும், துன்பத்திலும் இறைவனின் நிறைவும் வலிமையும் வெளிப்படுத்தப்படுகிறது. மனிதன் எப்போது தன்னுடைய பலவீனத்தை, என்னால் எல்லாம் முடியும் என்ற எண்ணத்தை கைவிடுகின்றானோ அப்போது இறைவனின்





9) மோசேயின் திருச்சட்டநூலில் எழுதப்பட்டுள்ள............கைக்கொள்வதில் கவனமாயிருங்கள். அதனின்று வலப்புறமோ இடப்புறமோ விலகாதபடி உறுதிகொண்டிருங்கள்.

10) அவர்களுக்கு வாக்களித்தபடி உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்கள் சகோதரர்களுக்கு இப்போது அமைதிக் ............. அளித்துள்ளார்.

12) அதற்கு அந்த ஒற்றர்கள், ............ உயிர் உம்கையில் உள்ளது. எங்களைப் பற்றி வெளியில் சொல்லாமல் இருந்தால் ஆண்டவர் எங்களுக்கு நாட்டை அளிக்கும்போது நாங்கள் உங்களுக்கு இரக்கம் காட்டுவோம். நம்பிக்கையுடன் நடந்துகொள்வோம் என்றனர்.

**மேலிருந்த கீழ்**

2) ஆயினும் உங்களுக்கும் அதற்கும் இரண்டாயிரம் அடி இடைவெளி இருக்கட்டும். யாரும் அதன் அருகில் செல்ல வேண்டாம். நீங்கள் செல்லும் வழி உங்களுக்குத் தெரியவேண்டும். ஏனெனில் நீங்கள் .............. இதுவரை சென்றதில்லை.

4) அவர்களுடைய எக்காளத்தின் நீண்ட முழக்கத்தை நீங்கள் கேட்டவுடன், நிங்கள் அனைவரும் பேரொலி .............

6) ஆலாக்கு மலையிலிருந்து சேயிர் வரை உயர்ந்து செல்லும் எர்மோன் மலைக்குக்கீழ் லெபனோன் பள்ளத்தாக்கில் உள்ள பாகால்காது வரை இருந்த பகுதிகளைக் கைப்பற்றி, அவற்றின் அரசர்களைப் பிடித்து, வெட்டிக் ...............

7) அவர்கள் மூதாதையருக்கு வாக்களித்தபடி ஆண்டவர் அவர்களுக்கு நாட்டின் எல்லை எங்கும் அமைதி நிலவச் செய்தார். பகைவர்களில் ............ அவர்களை எதிர்த்து நிற்க இயலவில்லை. கடவுள் அவர்களுடைய பகைவர்களை அவர்கள் கையில் ஒப்படைத்தார்.

10) ரூபன் மக்களும் ........... மக்களும், ஆண்டவரே கடவுள் என்பதற்கு நம் அனைவருக்கும் இப்பலிபீடமே சான்று என்று சொல்லி அதற்குக் கிலயாது என்று பெயரிட்டனர்.

11) என் ஊழியன் மோசே இறந்துவிட்டான். இப்பொழுது நீ புறப்பட்டு, யோர்தானைக் கடந்து, இந்த மக்கள் ............. நான் இஸ்ரயேலருக்குக் கொடுக்கும் நாட்டுக்குச் செல்.

13) நகரும் ........... இருக்கும் அனைத்தும் ஆண்டவருக்குரியன. ஆகவே அவை அழிவுக்குரியன. விலைமாது இராகாபும் அவருடன் வீட்டில் உள்ள அனைவரும் உயிருடன் இருப்பர். ஏனெனில் நாம் அனுப்பிய போர்வீரர்களை அவர் ஒளித்துவைத்தார்.

**கீழிருந்து மேல்**

1) யோசுவா........... மக்களிலிருந்து குலத்திற்கு ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிருவரை அழைத்தார்.

3) எகிப்திலிருந்து வெளியேறிய மக்கள் அனைவரிலும் போர்வீரர்களான ........... எல்லாரும் அழியும்வரை, இஸ்ரயேலர் நாற்பது ஆண்டுகள் பாலைநிலத்தில் அலைந்தனர்.

5) யோசுவா எல்லா மலைநாட்டையும் தாக்கினார். நெகேபு சமவெளியையும், பள்ளத்தாக்கையும் அதன் மன்னர்களையும் கைப்பற்றினார்: எவரையும் உயிருடன் தப்பவிடவில்லை. இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் கட்டளையிட்டது போல் அவர்களை ............

8) ஆனால் நீங்கள் ஆண்டவரைக் கைவிட்டு வேற்றுத் தெய்வங்களை வணங்கினால் அவர் .......... உங்களுக்குத் தீங்கு செய்வார். உங்களுக்கு நன்மை செய்த அவர் உங்களை அழித்து விடுவார்

9) உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்குக் கடடளையிட்ட உடன்படிக்கையை மீறி, நீங்கள் சென்று வேற்றுத் தெய்வங்களை வணங்கி, அவற்றுக்கு ஊழியம் செய்தால் ஆண்டவரின் சினம் உங்களுக்கெதிராகப் பற்றி எரியும். அவர் உங்களுக்கு அளித்த நல்ல நிலத்திலிருந்து விரைவில் ............... போவீர்கள்.

12) ............. மன்னன் ஓகாம், யார்முத்து மன்னன் பிராம், இலாக்கிசு மன்னன் யாப்பியா, எக்லோன் மன்னன் தெபீர் ஆகியோருக்கு எருசலேம் மன்னன் அதோனிசெதக்கு

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-06-2024

# மரியாவின் புகழ்ச்சிப் பாடல் 13



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

கடவுளின் இயல்பு என்ன? – அவர்தம்
செயலின் சிறப்புதான் என்ன?
யாருக்கெல்லாம் தெரிய வேண்டும்? – உடனே
எவருக்கெல்லாம் புரிய வேண்டும்?
விக்கி பீடியா தேவையில்லை – வேறெந்த
மல்டி மீடியாவும் தேவையில்லை
பட்டப் படிப்புத் தேவையில்லை – எந்த
சட்டப் படிப்பும் தேவையில்லை
தொட்டுப் பார்க்கத் தேவையில்லை – எதையும்
தாண்டிப் பார்க்கவும் தேவையில்லை
தேடி அலையத் தேவையில்லை – ஒற்றை
ரூபாய் செலவும் தேவையில்லை
கவிஞர் எவரும் சொன்னதில்லை – ஞானமுற்ற
முனிவர் எவரும் சொன்னதில்லை
இன்பம் சுவைத்தோர் சொன்னதில்லை – அளவில்லா
இன்னல் உற்றோரும் சொன்னதில்லை
இறை இயலாளர் சொன்னதில்லை – அன்பு
இறை அடியாரும் சொன்னதில்லை
வான் அறிஞரும் சொன்னதில்லை – பல்முறை
பேர் அறிஞரும் சொன்னதில்லை
யார் அவர்தான் சொல்லுமய்யா – அவர்
கூறும் மொழிதான் சொல்லுமய்யா
பேர் என்னதான் கூறுமய்யா – அவரின்
அரும் மொழிதான் கூறுமய்யா
மரியா என்பதுதான் பேரு – அவர்தம்
புகழ்ச்சிப் பாடலைதான் கேளு
கடவுள் யாரென்று தெரியும் - அவர்தம்
இயல்பு ஏதென்று புரியும்
இதுபோன்ற பாடல் உண்டோ? - இறைவனை
இதனினும் தேடல் உண்டோ?
இதுமட்டும் போதும் அன்றோ? – அளவிட
இதைவிட வேறு உண்டோ?





வலிமையோடும் வாழும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, உடல், உள்ள நோய்களால் அவதிப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் உமது உயிருள்ள பிரசன்னத்தால் நற்சுகத்தையும், உடல் நலனையும் கொடுத்து பாதுகாக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, வன்முறைகள், இயற்கையின் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் உமது இரக்கத்தால் அமைதியும், சமாதானமும், நம்பிக்கையும் பெற்றிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 13-ம் ஞாயிறு (30.06.2024)
## சாஞா 1:13-15, 2:23-24 2கொரி 6:7,9, 13-15 மாற் 5:21-43

**முன்னுரை**

உண்பதும் உடுத்துவதும்தான் வாழ்க்கை என்றால், அதை புல்லும் செய்யும் புழுவும் செய்யுமே. மானிடா நீ எதற்கு? என்று புதுக்கவிஞன் சொல்லி வைத்திருக்கிறான். வாழ்க்கை என்பது உண்பதும் உடுத்தவும் மட்டுமல்ல. அதற்கு இருத்தல் என்று பெயர். வாழ்வு என்பது இருத்தலைவிட பன்மடங்கு மேலானது. நிறைவாகவும், நிம்மதியாகவும், வளமையோடும், வல்லமையோடும், மாண்போடும், மகிழ்வோடும் நாம் இருந்தோம் என்றால் அதற்கு பெயர்தான் வாழ்வு. இப்படிப்பட்ட வாழ்வை வாழ இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

இத்தகைய முழுமையான வாழ்வு வாழ்வதற்கு தடையாக இருப்பதை இன்றைய நற்செய்தியில் இயேசு சுட்டிக்காட்டுகின்றார். வாழ்வுக்கான முதல் தடை சாவு, இரண்டாவது தடை பயம். சாவு என்பது உடல் சார்ந்த சாவு அல்ல, மாறாக செயலற்ற தன்மை. இங்குச் சுட்டிக்காட்டப்படும் சாவு பயத்தில் நம்மையே முற்றிலும் இழந்து வாழும் தன்மையாகும். பாவத்திற்கு அடிமையாக வாழும்போது, நாம் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர்கள் செத்தவர்கள் என்கிறார் யோவான். எனவே முழு மனித வாழ்வுக்குத் தடையாக இருக்கும் பாவம் மற்றும் பயத்தை அகற்றி வாழ இறையருள் வேண்டுவோம் இத்திருப்பலியில்.

**முதல் வாசக முன்னுரை**

கடவுள் நல்லவர், நன்மை நிறைந்தவர், தான் படைத்த உலகம் முடிவும் பெற வேண்டும் என்றல்ல மாறாக அழிவுறாமல் இருக்க வேண்டும் என்றே விரும்பினார். சாவும், அழிவும் வந்தது சாத்தான் மற்றும் பாவ வாழ்க்கையில் என்பது தெளிவு. கடவுள் சாவை உருவாக்கவில்லை. தீமையின் காரணமானவர் கடவுள் அல்ல. கடவுளிடமிருந்து வருவது நன்மை ஒன்றே. மனிதர் தீமை செய்தால் அதற்குரிய கைமாறும் நன்மை செய்தால் அதற்குரிய கைமாறும் பெறுவர் என்று கூறும் இம்முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

மனிதனின் கடமை என்ன என்பதையும், கொடுப்பதால் யாரும் குறைந்து போவதில்லை என்பதையும் தூய பவுல் கூறுகின்றார். மக்கள் மீட்பு பெற வேண்டும் என்பதற்காக இயேசு தம்மையே முழுவதுமாக

கொள்ள அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 12-ம் ஞாயிறு (23.06.2024)**
**யோபு 38:1,8-11 2கொரி 5:14-17 மாற் 4:35-41**

**முன்னுரை**

மனித வாழ்க்கை இன்பமும் துன்பமும் சுகமும் சோகமும் நிறைந்தது. இன்பம் வரும்போது இன்முகத்துடன் ஏற்றுக்கொள்ளும் மனிதன் துன்பம் வரும்போது நம்பிக்கை இழக்கிறான் கடவுளையும் வெறுக்கிறான். இன்றைய நற்செய்தியில் சீடர்களின் பயத்தையும் விசுவாசமின்மையையும் இயேசு கடிந்து கொள்கிறார். யோபுவை போல நமது வாழ்விலும் அலை அலையாய் துன்பங்கள் நம்மை தொடரலாம், சோதனைகளால் நமது வாழக்கை படகு திக்குமுக்காடலாம். அப்போது நாம் துன்பத்தில் சோர்வும் கவலையில் கண்ணீரும் வடிக்காது பாறைமீது கட்டப்பட்ட இல்லத்தைபோல ஆண்டவர் மீது உறுதியான நம்பிக்கையும், நிறைவான விசுவாசமும் கொள்ள இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

துன்பத்திற்கு மத்தியிலும், வாழ்க்கைப் புயல்களுக்கு மத்தியிலும் நிறைவாக மகிழ்ச்சியாக வாழ முடியும் என்பதை இயேசு இன்றைய நற்செய்தியின் வழியாக கற்றுத் தருகின்றார்.

**முதல் வாசக முன்னுரை**

யோபு நீதிமானாய் வாழ்ந்த போதிலும் அவரது வாழ்வில் துன்பங்கள் பல தொடர்கதையாக தொடர்ந்த போதும் அவர் நிலைகுலைந்து போகவில்லை. நண்பர்கள் பழித்துரைத்த போதும் அவர் நம்பிக்கை இழந்து விடவில்லை. என் தோல் அழிந்துப் போன பிறகும் என் சதையிலிருந்து விடுபட்டுக் கடவுளைக் காண்பேன். அவர் என் பக்கத்தில் நிற்க காண்பேன். என் கண்களால் நானே பார்ப்பேன் என்றார் யோபு. அதன் காரணமாக யோபுவின் முன்நிலையைக் காட்டிலும் பின் நிலமையை கடவுள் மிகுதியாக ஆசீர்வதித்தார்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

தனது உயிரைக் கொடுத்து நமது உயிரைக் காத்த இயேசு அடுத்த நேரத்தில் நம்மை காப்பார் என்று தூய பவுல் சான்று பகர்கிறார். கிறிஸ்துவின் பேரன்பினால் ஆட்கொள்ளப்பட்டு துன்பங்களை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டவர் புனித பவுல். அவரைப் போல நாமும் கிறிஸ்துவோடு இணைந்திருந்தால் அவரது பேரன்பினால் ஆட்கொள்ளப்பட்டு மகிழ்வோடு வாழ்வோம் என்ற நம்பிக்கையான வார்த்தைகளை நமக்கு தரும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது பேரன்பில் நிலைத்து நின்று எல்லா வாழ்வின் சூழ்நிலைகளிலும் உமக்கு சாட்சிகளாக வாழ அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, எங்களது அனுதின வாழ்வில் சந்திக்கும் துன்பங்களை கண்டு மனம் கலங்கிவிடாமல் நம்பிக்கையோடும், மன





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலம் 10-ம் ஞாயிறு (09.06.2024)**
**தொ.நூ 3:9-15 2கொரி 4:13-5:1 மாற் 3:20-35**

**முன்னுரை**

மனித உறவுகளில் சக மனிதர்களின் விருப்பங்களை தேவைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்கிற மனிதன் இறைவனின் விருப்பங்களை நிறைவு செய்கிறான் என்கிறது இன்றைய இறைவார்த்தை வழிபாடு. கடவுளின் விருப்பப்படி நடக்கிறவன் எவனோ அவனே என் சகோதரனும், சகோதரியும், தாயுமாவார்கள் என்கிறார் இயேசு. கடவுளின் வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடப்போர் பேறுபெற்றோர் என்னும் வாக்கியம் கேட்பதோடு மட்டுமல்ல, அதைக் கடைபிடித்து வாழ்பவர்கள் கடவுளுக்குள் வாழ்கிறார்கள் என்பதும், நிலைத்து நின்று நிலை வாழ்வைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதும் நிதர்சன உண்மை.

மனித வாழ்வில் பணம், பதவி, அந்தஸ்து, அதிகாரம், செல்வாக்கு போன்ற மதிப்பீடுகளுக்கு மாறாக எந்த மனிதன் அன்பு, இரக்கம், கருணை, பகிர்வு கொண்டு பொது நோக்கத்தோடு சிந்தித்து தன்னைவிட பாதிக்கப்பட்டவர்களை அறிந்து அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்யும்போது கடவுளின் விருப்பத்தை தனது உணர்வால், உறவால், பகிர்வால், நிறைவு செய்கிறான் என்பதாகும். ஒரு மனிதன் தன் சிந்தனை, சொல், செயல் உழைப்பில் பிறரின் விருப்பங்களில் நிறைவைத் தேடுகிறான். அத்தகைய நிறைவைக் கண்டு கிறிஸ்துவின் சகோதரனாக, சகோதரியாக வாழ தேவையான அருள் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இறைவனின் விருப்பத்தை மீறும்போது நாம் தண்டித்து திருத்தப்படுகின்றோம். நமது முதல் பெற்றோர்களான ஆதாம், ஏவாள் இறைவனின் வார்த்தைக்கு கீழ்படியாமல் தங்கள் சொந்த விருப்பத்திற்கும், உலக இன்பம் அனைத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். எனவே இறைவனது உறவை இழந்து வாழ்வின் நிறைவை இழந்து விட்டனர். எனினும் இறைவன் இரக்கம் நிறைந்தவர். எனவே மற்றொரு வாய்ப்பை மனிதனுக்கு கொடுக்கிறார். ஒரு மீட்பரை அனுப்புவதாய் வாக்களிக்கிறார்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

கடவுளின் விருப்பத்தை நிறைவு செய்யும்போது பல இன்னல்களை சந்திக்க நேரிடும். நாம் அடையும் இன்னல்கள் மிக எளிதில் தாங்கக் கூடியவை. அவை ஈடு இணையற்ற மாட்சியை

உருவாக்குகிறது. அம்மாட்சியை என்றென்றும் நிலைத்திருக்கும் என்கிறார் புனித பவுல் அடிகளார். அத்தகைய மாட்சியை நாமும் பெற இறைவிருப்பத்தை செயல்படுத்த தேவையான இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது விருப்பத்தை அறிந்து அவ்விருப்பத்தை மனமகிழ்வோடும், மனநிறைவோடும் வாழ்வாக்கிட 'தேவையான இறைஞானத்தையும் எங்களுக்கு அளித்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, உமது திருவுளத்தை நாங்கள் செயல்படுத்துகின்ற போது நாங்கள் எதிர்கொள்ளும் எல்லா சவால்களையும் மனத்துணிவோடு எதிர்கொள்ள தேவையான இறையருளை அளித்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, உமது அளவில்லா இரக்கத்தையும் அன்பையும் உணர்ந்து நாங்கள் எங்கள் பாவங்களை விடுத்து உமது அன்பில் நிலைத்திட வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, உடல், உள்ள, ஆன்மீக நோய்களால் பாதிக்கப்பட்டு நம்பிக்கை இழந்து இருக்கும் உம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து அவர்களுக்கு பூரண சுகம் தந்து அவர்களை காத்து வழி நடத்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, எங்கள் அனுதின வாழ்வில் நாங்கள் உம்மையும், பிறரையும் அன்பு செய்து உமது திருவுளத்தின்படி நடந்து உமது பிள்ளைகளாக வாழ்ந்திட அருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 11-ம் ஞாயிறு (16.06.2024)

**எசா 17:22-24 2கொரி 5:6-10 மாற் 4:26-34**

**முன்னுரை**

நம்பிக்கைதான் மனித வாழ்வுக்கு மகிழ்ச்சியும் வெற்றியும் தருகிறது. இறைவன் மீது நம்பிக்கை கொண்ட மனிதனுக்கு பயமும் பதற்றமும் இருக்காது. இறையரசு என்பது எட்டாத வானத்தில் கிட்டாத நிலவாக உள்ளது என்று தேடாமல் அது திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு மனித இதயத்திலும்தான் உள்ளது என்பதை நாம் உணர வேண்டும். தனக்குள் புதைந்து கிடக்கும் மகிழ்ச்சியை தானே தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்பது போல, இறையரசு தானாக வளர்ந்து பலருக்கு பயன்தரும் மரத்தைப் போன்றது என்கிறது இன்றைய இறைவார்த்தை.

இறையரசு என்பது மனித இதயம் என்னும் நிலத்தில் நம்பிக்கை என்னும் நீர் பாய்ச்சி, அதில் அன்பு, அமைதி, நீதி போன்ற விதைகளைப் பயிரிட்டு இறுதியில் மகிழ்வை அறுவடை செய்வதாகும். இறைவனையும், இறைச்சிந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள தொடங்கும்போதே இறையரசு இதயத்தில் குடிகொள்ள தொடங்குகிறது என்றே கூறலாம். எனவே இறையரசு இங்குள்ளது, அங்குள்ளது என்று தேடிக்





கொண்டிருக்காமல் நமது இதயத்துக்குள் உள்ளது என்பதை உணர்ந்து, இறைவனையும், இறைச்சிந்தனைகளையும் உள்வாங்கி உண்மையும் நன்மையும் நேர்மையும் தன்னிலே கொண்டவர்களாக வாழ்ந்து இறையரசுக்கு உரிய மக்களாக வாழ அருள் வேண்டுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

அடிமையாக்கப்பட்ட இஸ்ரயேல் இனம் இனி தழைக்காது என்று எண்ணியபோது இளங்கொழுந்து ஒன்றை அதன் கனிகொப்புகளிலிருந்து கொய்து இஸ்ரயேலின் மலை உச்சியில் நான் நடுவேன். அது கிளைத்து கனி தந்து சிறப்பு வாய்ந்த கேதுரு மரமாக விளங்கும். அனைத்துவகை பறவைகளும் அதன் கிளைகளில் கூடுகட்டி உறைவிடமாகத் தங்கும் என்று இறைவாக்கினர் வழியாகக் கடவுள் தரும் நம்பிக்கை நிறைந்த வார்த்தைக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

நமது மண்ணக வாழ்வை கூடாரத்தில் குடியிருப்பவனின் வாழ்க்கைக்கு ஒப்பிடுகின்றார் பவுல். இந்நிலையற்ற வாழ்விலும் கிறிஸ்து வழியாக நித்திய வாழ்வை பெற்றுள்ளோம். இவ்வுலக மனித வாழ்வு உடலும் ஆன்மாவும் கொண்டது. உடலின் வாழ்வைவிட ஆன்மீக வாழ்வு உயர்ந்ததென கருதினர் கிரேக்க அறிஞர்கள். ஆனால் பவுல் நாம் அனைவரும் இறைவனின் ஆலயம். இந்த ஆலயத்தை எவனாவது மாசுபடுத்தினால் அவன் தண்டனைக்குரியவன் என்கிறார். எனவே நாம் மண்ணகத்தை சார்ந்தவராயினும் நம் வாழ்வு விண்ணகக் கண்ணோட்டம் கொண்டதாய் அமைய வேண்டும் என்று கூறும் புனித பவுலின் குரலுக்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1 அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் கிறிஸ்துவின் படிப்பினைகளை ஏற்று அவற்றை வாழ்வாக்கி இறைவனது அரசை கட்டி எழுப்பும் கருவிகளாக மாற அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் இறைவனது ஆலயம் என்பதை உணர்ந்து எங்களது சொல், சிந்தனை மற்றும் செயல்கள் அனைத்தும் பரிசுத்தம் நிறைந்தவையாக அமைய அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் நல்ல நிலத்தில் விழுந்து நல்ல செடியாக மரமாக வளர்ந்து கனி கொடுக்கவும் இறைவார்த்தையை கேட்டு அதை வாழ்வாக்கவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4 அன்பின் இறைவா, இறையரசு என்பது உண்பதிலும், குடிப்பதிலும் அமைவதில்லை மாறாக தூய ஆவியாரின் கொடைகளாகிய அன்பு, சமாதானம், நீதி இவற்றை செயல்படுத்துவதில் என்பதை உணர்ந்து அன்போடும், உண்மையோடும், சமாதானத்தோடும் வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5 அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் உண்மையான மகிழ்ச்சியை தேடி வெளியே அலையாமல் உண்மையான மகிழ்ச்சி எங்களது உள்ளத்தில் உள்ளது என்பதை உணர்ந்து செபத்திலும் தியானத்திலும் நிலைத்து நின்று உண்மையான மகிழ்ச்சியினை கண்டு